# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.159/2024 | Date | : | 02-03-2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.4** | Taluk | : | |
| Name | : | **திரு.செல்வகுமார்** | Calling | : | |
| Father/Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.03.2026.

(எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் சார்பில் குவிமுச 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2023 ஆம் தேதி, சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக நான் நிலைய அலுவலில் இருந்தபோது, முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற பழனியம்மாள், என்பவரின் RTA தகவலின்பேரில், மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது காயமடைந்த நபர் மேல்சிகிச்சைக்காக திருச்செங்கோடு கிருஷ்ணா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருப்பதாக அறிந்து மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பழனியம்மாள், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.423/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்துள்ளேன். முதல் தகவல் அறிக்கையை, புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளேன் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2) பின்னர், அன்றைய தினமே, மாலை சுமார் 05.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் செல்லப்பன் மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றுள்ளேன் (**மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவயிட சாட்சிகள் சரவணன், ராஜா, கோவிந்தராஜ், செல்லப்பன் மற்றும் விபத்தில் காயமடைந்த பழனியம்மாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன்.

3) பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரி பிரகாஷ், த/பெ.கந்தன் என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 26.10.2023 ஆம் தேதி, பிற்பகல் சுமார் 01.15 மணிக்கு கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளேன்.

4) பின்னர், கடந்த 02-11-2023 ம் தேதி, இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 52 AB 7963 என்ற பதிவெண் கொண்ட Splendor Plus இருசக்கர வாகனத்தை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன

ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை கடந்த 04-12-2023ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கையை பெற்றேன். (**TN 52 AB 7963 என்ற பதிவெண் கொண்ட Splendor Plus இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த பழனியம்மாள், என்பவருக்கு சிகிச்சை அளித்த திருச்செங்கோடு கிருஷ்ணா மருத்துவமனை மருத்துவர் திரு.சரவணன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு அறிக்கை மற்றும் காயச்சான்று பெற்று மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். (**விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்று முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6) பின்னர், பழனியம்மாளுக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்றுகள் வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 338 இதச- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 338 இதச-ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றும், சரிவர

புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Selvakumar

Judicial Magistrate No.1,

Sankari.